மாவட்ட நீதிமன்றங்கள் அமைந்துள்ள இடங்களில் மட்டுமே சட்டக் கல்லூரி தொடங்க முடியும். எனவே, மாவட்ட நீதிமன்றம் ஆரணியில் இல்லாத சூழ்நிலையில் அவர் இவ்வளவாக நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்ற ஒரு சூழ்நிலையில் அவருடைய கோரிக்கையை நிராகரிக்க இயலாது. எனவே, இந்த விதி 8–ஐ பிரத்தியேகமாகத் தளர்த்த முடியுமா என்று இந்திய Bar Council-லிடம் கருத்துக் கேட்டு நம்முடைய சட்டப் பல்கலைக்கழகம் மூலமாக எழுதப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 6, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

6—

திருக்கோயில்களுக்குச் சுற்றுச் சுவர்

***32712–திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, பழைய பெருங்களத்தூரிலுள்ள சிவன்கோயில், முருகன் கோயில் மற்றும் முத்துமாரியம்மன் திருக்கோயில்களுக்குச் சுற்றுச் சுவர் மற்றும் திண்காரைத் தளம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தாம்பரம் தொகுதி, பழைய பெருங்களத்தூரில் உள்ள (1) சிவன் கோயில் (2) முருகன் கோயில் போன்ற இத்திருக்கோயில்களுக்கு திண்காரைத் தளம் ரூ.25,000/– மதிப்பீட்டில் 10–9–2002–ல் போட்டு முடிக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சுவர் பொதுமக்கள் நன்கொடை மூலம் எழுப்பப்பட்டு பணி முடிவடையும் தறுவாயில் உள்ளது. (3) அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலுக்கு திண்காரைத் தளம் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்க நன்கொடையாளர்கள் எவரும் முன்வராததால் இப்பணிகள் செய்ய இயலாத நிலை உள்ளது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

2004 ஜூலை 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 7, திரு. வீ. சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

7—

அன்னதானத் திட்டம்

***37395–திரு. வீ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி ஒன்றியம், தும்பூர் கிராமத்திலுள்ள அருள்மிகு நாகம்மன் திருக்கோயிலில் இலவச அன்னதானத் திட்டம் துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி ஒன்றியம், தும்பூர் கிராமத்திலுள்ள அருள்மிகு நாகம்மன் திருக்கோயிலின் வருவாய், திருக்கோயிலின் நிர்வாகச் செலவினங்களுக்கே ஈடு செய்யக்கூடிய நிலையில் உள்ளதால், இத்திருக்கோயிலில் அன்னதானத் திட்டத்தினை தற்சமயம் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வீ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்ற சொல்லுக்கு இடமே இல்லை என்று பொன்னான ஆட்சி செய்து கொண்டிருக்கிற இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் இன்றைக்கு நாட்டு மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகப் பல்வேறு சலுகைகளை அள்ளித் தருகின்ற அரசாக விளங்கிக் கொண்டிருக்கிற காரணத்தினால் உடனடியாக இந்தத் திட்டத்தை அமல்படுத்த முடியாவிட்டாலும் எதிர்வரும் காலங்களில் மீண்டும் பரிசீலனை செய்து, நிதி வசதி இல்லாவிட்டாலும்கூட நிதி வசதி அதிகம் உள்ள திருக்கோயிலிலிருந்து உபரி நிதியைப் பெற்று இந்தத் திட்டத்தை தும்பூர் நாகம்மன் கோயிலில் அமல்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.